1969 மார்ச 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாக எழுதி அனுப்பிஞல் பரிசீலிக்கப்படும்.

அணைக்கட்டுகள்

*525 **விஞ.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை என்னும் பள்ளத்தின் மேல், செல்லம்பாளையம் கிராமத்துக்கு பக்கத்தில் அணை கட்டும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) & (இ) எண்ணமங்கலம் கிராமத்திற்கு அருகில் வழுக்குப்பாறை பள்ளக் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு (பாசனத்) தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. அதன் விவரம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலளிக்கையில் இந்தத் திட்டம் ஆய்வில் உள்ளது என்று கூறிஞர்கள். இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கராக்களுக்குப் பாசன வசதிகள் கிடைக்கும்? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 750 ஏக்கர் புதிய பாசனத் திட்டம், 977 ஏக்கர் பாசன ஊர்ஜிதப்படுத்துவதற்கு. மொத்தம் 1,860 ஏக்கர். இதன் உத்தேசச் செலவு ரூ. 25 இலட்சம்.

*526 **விஞ.—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் ஓடும் வறட்டுப் பள்ளத்தில் மேல் எண்ணமங்கலம் கிராமத்திற்கு பக்கத்தின் அணை கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அணை, 2,089 ஏக்கர் அடங்கிய புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதியளிக்கும். இதற்கு ரூபாய் 40·90 லட்சம் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையின் உள்ளூர் அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த அந்தியூர் பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு கோடைகாலத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப் படவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு திட்டங்களை யும் விரைவாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செங்கத்திற்கு வடக்கே செய்யாற்றின் குறுக்கே பாலம்

* 527 **விஞ.—திரு. பி. எஸ். சந்தானம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் கிராமத் திற்கு வடக்கே செல்லும் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்ட சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?